## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளுக்கு

# பல்வேறு கட்சிகள்-இயக்கங்கள்-சங்கங்கள் ஆதரவு!

## (இரண்டாவது பட்டியல்)

சென்னை, ஏப். 9 -

நடைபெறவிருக்கும் 2026 தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க.தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் போட்டியிடும் அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற முழு ஆதரவு அளிப்பதோடு, தமிழகம் முழுவதும் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் இணைந்து பிரச்சாரத்தை மேற்கொண்டு, தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற பாடுபடுவதாக ஏற்கனவே 175 இயக்கங்கள், கட்சிகள் உறுதி அளித்திருந்த நிலையில், தற்போது கீழே குறிப்பிட்டுள்ள கட்சிகள்- இயக்கங்கள்- சங்கங்கள் ஆதரவளித்து உறுதி அளித்துள்ளன.

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு அளிக்கும்**

**கட்சிகள் - இயக்கங்கள் - சங்கங்கள் பட்டியல்.**

1. பாமரர் முன்னணி கட்சி (நிறுவனத் தலைவர் ஏ.ஆர். ரவிச்சந்திரன் )
2. தேசிய வர்த்தகர்கள் முன்னேற்ற பேரவை (நிறுவனர் / தலைவர் டாக்டர் ஜெகே. (எ) பி. ஜோதிகுமார்)
3. தமிழ்நாடு தலைமை காட்டுநாயகன் பழங்குடி சமூக நல சங்கம் (நிறுவனர் / மாநில தலைவர் கி.பழங்குடி பாலு)
4. தேசிய திராவிட கட்சி (நிறுவனத் தலைவர் இராசிபுரம் டி.கே. முருகேசன்)
5. தென்னிந்திய விஸ்வகர்மா முன்னேற்றச் சங்கம் (நிறுவனர் / தலைவர் டாக்டர் என். ராமலிங்கம்)
6. கொங்குநாடு திராவிட கட்சி (நிறுவனத் தலைவர் ஏ.ஜி. பாட்டன் சக்திவேல்)
7. தமிழர் குடியரசு கட்சி (மாநில தலைவர் கே. தீனன் பெருமாள்)
8. ஜனநாயக வெற்றிக் கழகம் (நிறுவனத் தலைவர் / மாநில தலைவர் ப. வீரபிரகாஷ்)
9. உலகமெல்லாம் சன்மார்க்க ஆட்சி அறக்கட்டளை (யுஎஸ்ஏ) (நிறுவனத் தலைவர் நா. மகேந்திரன்)
10. வேளிர் மக்கள் கட்சி (நிறுவனத்தலைவர் முனைவர் மா. பாலசுப்பிரமணியன்)
11. தென்னிந்திய ஆதி பழங்குடி மக்கள் நல முன்னேற்ற சங்கம் (தலைவர் டாக்டர் வி. சங்கர்)
12. தமிழ்நாடு பெருந்தலைவர் அனைத்து அமைப்புசாரா மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் (தலைவர் எஸ். மணிமேகலை)
13. அகில இந்திய மாவீரன் அழகுமுத்து கோன் பேரவை (நிறுவனர் " சுடர்ஒளி" ச.முருகன்)
14. உலக அமைதி மற்றும் மறுவாழ்வு அமைப்பு ( தலைவர் டி. ராஜாராம்)
15. காவி புலிப்படை (நிறுவனத் தலைவர்சி. பி. போஸ் (எ) குபேந்திரன்)
16. உழைப்பாளர் முன்னேற்றக் கழகம் (நிறுவனத் தலைவர் இரா.ஆறுமுகம்)
17. ஐக்கிய முஸ்லிம் முன்னேற்றக் கழகம் ( தலைவர் செ. ஹைதர் அலி)
18. தமிழ்நாடு அருந்ததியர் மக்கள் கட்சி ( மாநில தலைவர் ஜி. சுப்பிரமணி)
19. அனைத்து முதலியார் வேளாளர் சங்கங்களின் பேரவை ( தலைவர் வா. பா. பழனி)
20. தமிழ்நாடு சமத்துவ தையல் தொழிலாளர்கள் நலச்சங்கம் (நிறுவனர் / மாநில பொதுச் செயலாளர் கவிஞர் சி. வீர. சங்கர்)
21. சிறுபான்மை மக்கள் கட்சி ( நிறுவனர் / தலைவர் எர்ணாவூர் எஸ். ஜெயராஜ்)
22. அனைத்துலக மக்கள் நல உரிமைக் கழகம் (நிறுவனர் / தலைவர் மரு. கே. இராஜேந்திரபிரபு)
23. தமிழ்நாடு நுகர்வோர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு அமைப்பு (மாநில ஒருங்கிணைப்பாளர் டி.அன்புசெழியன்)
24. தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (மாநில தலைவர் ஏ. குமார்)
25. அனைத்து இந்திய வள்ளுவர் கூட்டமைப்பு ( மாநில தலைவர் டாக்டர் லயன் இராஜ . பரசுராம ஆழ்வார்)
26. தேசிய தூய்மை புரட்சி கட்சி (நிறுவனத் தலைவர் எம். ராஜாங்கம்)
27. சமூகநீதி மக்கள் விடுதலை முன்னணி (நிறுவனத் தலைவர் ஏ.ஆர். வேலுமூர்த்தி)
28. திரு.வி.க. கட்டுமான அமைப்புசாரா பொது தொழிலாளர்கள் நலச்சங்கம் - ( மாநில பொதுச் செயலாளர் ஜெ.எஸ். ஜான்சன்)
29. தேசிய சிறுபான்மை கழகம் அரசியல் கட்சி - (நிறுவனத் தலைவர் பேராசிரியர் என்.எம்.சதக்கத்துல்லாஹ் மௌலானா)
30. அகில இந்திய மருதநாயகம் மக்கள் கட்சி - (தலைவர் சொ. தமீம் அன்சாரி)
31. அகில இந்திய ஜனநாயக மக்கள் நலப் பேரவை - (நிறுவனர் / தலைவர் டாக்டர் ஆ. ஹென்றி)
32. தமிழ்நாடு ஆட்டிறைச்சி (சில்லறை ) வியாபாரிகள் சங்கம் - ( மாநில தலைவர் ஏ.கே. சான்பாஷா)
33. கிறிஸ்தவ பாதுகாப்பு இயக்கம் - ( நிறுவனர் / தலைவர் திரு. டி.எஸ். மகிமை தாஸ்)
34. மக்கள் நீதிப் பேரவை (மாநில அமைப்பாளர் தே. சா. ஆதிதமிழ்செல்வன்)
35. கைவினைஞர் முன்னேற்றக் கட்சி (பொதுச் செயலாளர் பொன். கனகராஜ்)
36. அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கம் - ( நிறுவனத் தலைவர் ஜி.கே. விவசாயமணி (எ) ஜி. சுப்பிரமணியம்)
37. தமிழ்நாடு தியாகராஜ பாகவதர் (எம்கேடி) பேரவை - (மாநில பொதுச் செயலாளர் எஸ்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன்)
38. தேவேந்திரகுல வேளாளர் சகோதரர் சங்கம்
39. சோசலிஸ்ட் ஜனதா கட்சி - எஸ்.ஜெ.பி. (சி) ( மாநில தலைவர் தஞ்சை இளஞ்சிங்கம்)
40. டிராஃபிக் இராமசுவாமி பவுண்டேஷன் - ( நிறுவனர் ஜெ. தங்கராஜன்)
41. நாட்டுப்புற கலைஞர்கள் நலசங்கம் (தலைவர் டி. புண்ணியமூர்த்தி)
42. அகில இந்திய கிராமணி நாடார் மக்கள் முன்னேற்ற சங்கம் - (மாநில தலைவர் என். வேதகிரி)
43. வீரத்தமிழர் மக்கள் முன்னேற்ற கழகம் - ( நிறுவனத் தலைவர் வீர. மங்கேஸ்கர் (எ) சித்தார்த்)
44. சென்னை மாநகர ஆதிதிராவிடர் நல கூட்டமைப்பு (நிறுவனத் தலைவர் ஆ. ராஜசேகர்)




தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில். ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பெருமாள் மற்றும் பழைய சிறுவங்கூர் ஊராட்சி மன்ற தலைவர் செல்வி பால்ராஜ் ஆகியோர்களின் ஏற்பாட்டில், பா.ஜ.க. மாவட்ட மகளிர் அணி நிர்வாகி உமா, பா.ஜ.க. ஒன்றிய நிர்வாகிகள் தவசியப்பன், பழனிவேல், அ.தி.மு.க. கிளை கழக நிர்வாகிகள் பிச்சப்பிள்ளை, முருகேசன் மற்றும் அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி மணிவண்ணன் ஆகியோர் தங்களது ஆதரவாளர்கள் 200க்கும் மேற்பட்டோருடன் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

## கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

# மயிலம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கலந்து கொள்ளும் தேர்தல் தொடர்பான அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (09.04.2026 - வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு, மயிலம் வடக்கு ஒன்றியம், தீவனூரில் உள்ள ஜி.ஜெ.திருமண மண்டபத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில், மயிலம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் டாக்டர் மாசிலாமணி முன்னிலையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

கூட்டத்தில் மயிலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, நிர்வாகிகள் ஒன்றியகழக செயலாளர்கள் தேர்தல் பணி குழு நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான்**
**எம்.எல்.ஏ.,**
பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

# விவசாய நிலம் இல்லாத எடப்பாடி விவசாயியா?

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கேள்வி!

சிவகங்கை, ஏப். 9 –


சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ஐந்தாவது முறையாக போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர், அமைச்சர்கேஆர்.பெரியகருப்பன் திருப்பத்தூரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழக முதல்வர் தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி இம்முறை 17வது சட்டமன்றத் தேர்தலை சந்திக்கிறது. வருகிற ஏப்ரல் 23ஆம் தேதி வாக்கு பதிவு நடைபெறுகிறது. கழகத் தலைவர் அவர்களால் கூட்டணி இறுதி செய்யப்பட்டு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு வேட்பு மனு தாக்கல் முடிவடைந்துள்ளது. தேர்தல் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நான்கு முறை போட்டியிட எனக்கு வாய்ப்பு அளித்த கழகத் தலைவர் தமிழக முதல்வர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும், வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்த தொகுதி வாக்காள பெருமக்களுக்கும் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்தாவது முறையாக என்னை போட்டியிட வாய்ப்பு அளித்த கூட்டணி கட்சியின் தலைவர் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களுக்குமீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் இத்தொகுதியில் பெரும்பாலான பிரச்சி னைகளை மக்களின் ஆதரவுடன் தீர்த்து வைத்துள்ளேன். அவர்கள் கோரிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றி தருவேன். தொடர்ந்து ஐந்தாவது முறையாக போட்டியிடும் நான் வெற்றி பெற்று மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி எடுப்பேன்.

நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன். சிவகங்கை மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழகத் துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, துணை முதலமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மற்றும் கூட்டணி கட்சியினர் வாக்கு சேகரித்துள்ளார்கள். இதே போல் வருகிற 11ம் தேதி சிவகங்கை மாவட்டத்தில் கழகத் தலைவர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் நான்கு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார் .

நான்கு தொகுதிகளிலும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஒத்துழைப்புடன் வாக்கு சேகரிப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இந்த கொள்கை கூட்டணி தொடர்ந்து வெற்றியினை பெற்று வருகிறது . கழக தலைவர் விருப்பத்திற்கு ஏற்ப 200க்கும் மேற்பட்ட தொகுதியில் நிச்சயம் வெற்றி பெறும் என்பது உறுதியாக தெரிகிறது. களப்பணியில் நாங்கள் செல்லும் பொழுது மக்கள் தரும் வரவேற்பு ஆதரவு வைத்து இதை புரிந்து கொள்ள முடிகிறது .

எப்போதுமேதேர்தலில் தி.மு.க. தேர்தல் அறிக்கை கதாநாயகனாக திகழும். ஏற்கனவே கழக தலைவர் அவர்கள் 2021 தேர்தலில் அறிவித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்பொழுது 2026 ல் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் மக்களை மிகவும் கவர்ந்துள்ளது. குறிப்பாக பெண்களுக்கான பல்வேறு அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளது. அதேபோல் கடந்த ஐந்து ஆண்டுகளில் கல்வி, சுகாதாரம் மற்றும் அனைத்து துறைகளிலும் தமிழகம் முன்னேற்றியுள்ளது .இதை மக்களிடம் எடுத்துக் கூறும்போது அவர்கள் தரும் வரவேற்பில் காண முடிகிறது .இந்தியாவிலேயே தமிழகத்தில் உயர் கல்விதரம் உயர்ந்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.11% அமைந்துள்ளது. எனவே முதல்வர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு உள்ளார் என்பது இதன் மூலம் தெரிகிறது. திட்டமிட்டு முதல்வர் அவர்கள் செயல்பட்டு



வருகிறார்.

மக்களின் தேவைகளை அறிந்து அந்த திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். எனவே தொடர்ந்து கழக ஆட்சி அமையவும் இந்த மக்கள் நலத் திட்டங்கள் தொடரவும் தமிழக முதல்வர் அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராக பதவி ஏற்கவும் மக்கள் வாக்களிக்க தயாராக உள்ளார்கள். ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைக்கும். இது பிரகாசமாக உள்ளது. சாத்தான்குளம் தந்தை மகன் கொலை வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பு வரவேற்கத்தக்கது. அன்று எதிர்கட்சி தலைவராக இருந்த தளபதி அவர்கள் காவல்துறையில் நடைபெற்ற இந்தசம்ப வத்தில் உரிய விசாரணை நடைபெற வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

அதை அப்பொழுது முதல்வராக இருந்த எடப்பாடி அவர்கள் மறுத்தார்கள். கழகம் பல்வேறு போராட்டங்களை நடத்தியதால் விசாரணை நடைபெற்றது . இன்று கழகத் தலைவர் கூறிய குற்றச்சாட்டு கள் உண்மை என்பது நீதிமன்ற தீர்ப்பின் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் கழக தலைவர் தளபதி ஆட்சியின் முலம் குடும்ப த்தில் ஒருவருக்காவது அரசின் பயன் கிடைத்துள்ளது.இதை தமிழகம் முழுவதும் மக்கள் நன்றியுடன் கூறுகிறார்கள். ஒன்றிய பா.ஜ.க அரசு பல்வேறு வகையில் நமக்கு துரோகம் செய்துவருகிறது . அதையெல்லாம் மீறி கழகத் தலைவர்அவர்கள் பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறார். அந்நிய தொழில் முதலீடு மூலம் ருபாய் 12 கோடியே 50 லட்சம் முதலீடு ஈட்டப்பட்டுள்ளது. பல லட்சம் இளைஞர்களுக்கு தனியார் துறை மூலம் அரசுக்கு இணையான ஊதியம் பெரும் வகையில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையால் ஒரு கோடியே 31 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளார்கள். தளபதி அவர்கள் இதை அறிவித்த போது எடப்பாடி அவர்கள் தளபதி அவர்களால் வழங்க முடியாது என்று கூறினார். ஆனால் தளபதி ஆட்சிக் கு வந்ததும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டது. தற்பொழுது எடப்பாடி இதற்கு போட்டியாக இந்த தொகையை உயர்த்தி அறிவித்துள்ளார். எடப்பாடி ஏலம் விடும் தலைவராக உள்ளார். அவரது பேச்சை மக்கள் நம்ப தயாராக இல்லை எடப்பாடி பழனிச்சாமி என்பவர் செல்லாத நோட்டாக தான் உள்ளார். ஆனால் தமிழக முதல்வர் தரும் வாக்குறுதிகளை தங்கத்திற்கு இணையாக மக்கள் மதிக்கிறார்கள். முதல்வர் செல்வாக்கு டாலர் அளவிற்கு உயர்ந்துள்ளது. முதல்வர் கூறும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையை மக்களிடம் பெற்றுள்ளார். அவரது தேர்தல் பிரச்சார பேச்சுக்கள் மக்களை மிகவும் ஈர்த்துள்ளது. அவர் செல்லும் இடங்களில மக்கள் அதிக அளவு ஆதரவு தருவதை பார்க்க முடிகிறது. எனவே இம்முறை கழக தலைவர் விருப்பம் போல் ஆட்சி அமைவது உறுதியாகிவிட்டது. திருப்பத்தூரில் நான் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. ஆனாலும் நாம் எதிரிகளை குறைத்து மதிப்பிட கூடாது. ஓய்வின்றி நமது தேர்தல் பணிகளை நாம் முழுமையாக செய்திட வேண்டும். எடப்பாடி தன்னை விவசாயி என்று கூறிக் கொள்கிறார். ஆனால் அவரது வேட்புமனு ஆவணத்தில் விவசாயிக்காக ஒரு சென்ட் நிலம் கூட இல்லை என்று அபிடவிட்டில் கூறியுள்ளார்.இவர் எவ்வாறு விவசாயி என்று கூறிக் கொள்ளுவார்.

இதுவரை தேர்தலில் போட்டியிட்டு பத்து முறை தோல்விஅடைந்த பழனிச்சாமி பதினோராம் முறையாக தோல் வி அடைவார் . இந்த சட்டமன்ற தேர்தலில் தோல்விஅடைவதன் மூலம் 11வது தோல்வி பழனிச்சாமி என்ற பெயரினை மக்கள் அவருக்கு தீர்ப்பாக வழங்க உள்ளார்கள்.

தொடர்ந்து கழக அரசு அமையவும் மக்கள் ஆதரவு தர வேண்டும். தருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.நடிகர் விஜய் அரசியலுக்கு வந்ததால்இளைஞர்கள் வாக்கு தி.மு.கவிற்கு பிரியும் என்று கூறப்படுகிறது. அது உண்மையல்ல. கழகத்திற்கு உள்ள இளைஞர்கள் வாக்கில் சேதாரம் ஏற்படாது. கரூரில் 41பேர் உயிர் இழந்த சம்பவத்தில் அவர் அவர்களது வீட்டிற்கு சென்று ஆறுதல் கூற வில்லை. அதுதான் பண்பாடு. ஆனால் அவர்களை சென்னைக்கு வரவழைத்து ஆறுதல் கூறினார். இது விசித்திரமான தாகும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் புலவர் கி.தியாகராசன்

### ஏப்ரல் 9 (2000)



**அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலம் தொட்டு, பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களுடன் திராவிடர் இயக்கத்தில் இணைந்து பணியாற்றியவர்.**

**தந்தை பெரியாரின் தன்மானத் தொண்டராய் – பேரறிஞர் அண்ணாவின் பேரன்பையும் – தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பையும் பெற்றவர்.**

**தந்தை பெரியாரின் இல்லத்தில் தங்கி, ‘குடியரசு’ நாளிதழில் பணியாற்றியதோடு, கழகத்தின் “நம் நாடு” ஏட்டின் துணை ஆசிரியராகவும் பணியாற்றி இயக்கத் தொண்டாற்றியவர்.**

**இராயபுரம் பகுதியில் கழகம் வளர்ந்திட இயக்கத் தோழர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**